பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 09 2024 **WEDNESDAY** **6.30 PM**

## மாநில செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. புருனே பயணத்தை முடித்துக்கொண்டு சிங்கப்பூர் சென்ற பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

2. இளைய சமுதாயத்தினர் வரும் 25 ஆண்டுகளில் நாட்டில் மாபெரும் மாற்றத்தை கொண்டுவருவார்கள் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. ஈட்டன் நிறுவனம் சென்னையில் 200 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தம் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

4. தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பாரிஸ் பாராலிம்பிக் ஆடவர் குண்டு எறிதல் போட்டியில் இந்தியாவின் சச்சின் கிலாரி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<<<<<>>>>>

புருனே பயணத்தை முடித்துக்கொண்டு, இன்று பிற்பகல் சிங்கப்பூர் சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்நாட்டின் உள்துறை அமைச்சர் திரு சண்முகம், விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்றார்.

பின்னர், அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில், சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வாங், கலந்துகொண்டார்.

இந்தியா – சிங்கப்பூர் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவுகளை மேம்படுத்துவது குறித்து நாளை நடைபெறும் பேச்சுக்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

சிங்கப்பூர் அதிபர் மற்றும் பல்வேறு முக்கிய தலைவர்களையும் பிரதமர் சந்தித்து பேச உள்ளார்.

முன்னதாக, இந்தியாவுக்கும், புருனேவுக்கும் இடையே செயற்கைக்கோள் தொழில்நுட்பம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரதமர் திரு நரேந்திர மோடி, புருனே மன்னர் **Haji Hassanal Bolkiah** முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, விண்வெளி தொழில்நுட்பம், சுகாதாரம், இருநாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

இந்தியாவின் கிழக்கத்திய கொள்கையில் புருனே முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த பேச்சுக்களின்போது குறிப்பிட்டார்.

**<<<<<>>>>>**

இளைய சமுதாயத்தினர் வரும் 25 ஆண்டுகளில் நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவருவார்கள் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கல்வி நிறுவனங்களின் வளர்ச்சித் திட்டம் குறித்த பயிலரங்கில் உரையாற்றிய அவர், நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் வளமான கல்வி கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாணவ, மாணவியருக்கு வழங்கும் பட்டங்கள், அவர்களுக்கு மிகுந்த பயனுள்ள வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உயர்கல்வி பயில்வோர் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் வகையில் ஒரே சமயத்தில் வெவ்வேறு பாடங்களை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கித்தர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பல்கலைக்கழக மானியக்குழு, ஒழுங்காற்று அமைப்பாக மட்டும் செயல்படாமல், உயர்கல்வி நிறுவனங்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகளையும், வசதிகளையும் உருவாக்கித்தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழக மானியக்குழுவின் புதிய நடைமுறைகள் மற்றும் விதிகளையும் அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வெளியிட்டார்.

<<<<<>>>>>

அயர்லாந்து மற்றும் அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு இயங்கிவரும் ஈட்டன் நிறுவனம் சென்னையில் 200 கோடி ரூபாய் முதலீட்டில் தொழில் தொடங்குவதற்கான ஒப்பந்தம் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சிகாகோ நகரில் கையெழுத்தாகியுள்ளது.

கணினி மென்பொருட்கள், தொழிற்சாலைகளுக்கான இயந்திரங்கள், வீட்டுகட்டுமானப் பொருட்கள், ஏரோ ஸ்பேஸ் மற்றும் மின்சாதனங்கள் உள்ளிட்டவற்றை ஈட்டன் நிறுவனம் உற்பத்தி செய்கிறது.

அட்லாண்டாவை சேர்ந்த அஸூரண்ட் நிறுவனத்துடன் மற்றொரு ஒப்பந்தமும் முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

<<<<<>>>>>

காற்று மற்றும் நீர் மாசுபடுவதை தடுக்க மாநில அரசு முழுவீச்சில் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் ஆண்டுதோறும் பத்து கோடி மரங்கள் நடும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

மாநில வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தனுடன் இணைந்து, நாமக்கல் மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில், மரக்கன்றுகளை நட்டார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் மெய்யநாதன், பள்ளிப்பாளையம் பகுதியில் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் கண்காணித்து, உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

அந்த பகுதியில் சாயப்பட்டறை உரிமையாளர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மத்திய அரசின் பசுமை கங்கை திட்டத்தின்கீழ், 75 சதவீத நிதியுதவியை மத்திய அரசு இந்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு வழங்குவதாகவும் எஞ்சியுள்ள 25 சதவீத நிதியை மாநில அரசு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

காவிரி ஆற்றில் கலக்கும் கழிவுகளை தடுக்க மாநகராட்சி பகுதிகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் திரு மெய்யநாதன் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மத்திய – மாநில அரசுகள் ஒருங்கிணைந்து மேற்கொண்டுவரும் ஆயுஷ்மான் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

அரியலூர், ஜெயங்கொண்டம், குன்னம் ஆகிய பகுதிகளில் 3 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலைய கட்டிடங்களை திறந்துவைத்து பேசிய அமைச்சர், ஐந்து லட்சம் ரூபாய் வரை சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கான மருத்துவக்காப்பீடு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக அரசின் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்வது குறித்து நேற்று முன்தினம் ஆலோசிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கு மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறையின் மூலம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதால் இந்தநோய் பரவல் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - மா. சு. – 20 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்ட விவசாயிகள் காய்கறி பயிர்கள் உற்பத்தித்திறனை மேம்படுத்திட தோட்டக்கலைத்துறையின் பல்வேறு திட்டங்களில் பதிவு செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி சாந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டம் களக்காட்டூர் ஊராட்சியில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை அம்மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

------------

செங்கல்பட்டு மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கடலோர பகுதிகளில் ஆபரேஷன் சாகர் கவாஜ் எனப்படும் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

---------------

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், நாகையில் பள்ளி மாணவ, மாணவியர் கலந்துகொண்ட மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

---------------

கரூர் அரசு கலைக்கல்லூரியில் ஊட்டச்சத்து வார விழாவை முன்னிட்டு ஊட்டச்சத்துமிக்க உணவு முறைகள் மற்றும் நோய் விழிப்புணர்வு கண்காட்சி இன்று நடைபெற்றது.

---------------

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், வேளாண் விற்பனைக்கூடம், தாமிரபரணி ஆற்றுப்பாலம் ஆகியவற்றை சட்டமன்ற மதிப்பீட்டுக்குழுவினர் இன்று ஆய்வு செய்தனர்.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சச்சின் கிலாரி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் குண்டு எறிதல் **F-46** போட்டியில் 16 புள்ளி மூன்று இரண்டு மீட்டர் தூரம் வீசி அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

பாராலிம்பிக்கில் இந்தியா இதுவரை 3 தங்கம், 8 வெள்ளி, 10 வெண்கலம் என மொத்தம் 21 பதக்கங்களை வென்றுள்ளது.

---------

பாராலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வென்று நாடு திரும்பிய பேட்மிண்டன் வீரர்களுக்கு புதுதில்லி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

குமார் நித்திஷ் தங்கப்பதக்கமும், துளசிமதி முருகேசன், சுகாஷ் எத்திராஜ் வெள்ளிப்பதக்கங்களையும், மனிஷா ராமதாஸ், நித்யஸ்ரீ சிவன் ஆகியோர் வெண்கலப்பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வெற்றிபெற்ற பேட்மிண்டன் வீரர்களை சந்தித்து அவர்கள் படைத்த சாதனைகளை பாராட்டினார்.

இந்த முறை பாரிஸ் பாராலிம்பிக்கில் இந்திய வீரர்கள் அதிக பதக்கங்களை பெற்று வருவது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

மேலும் பல சாதனைகளை பாராலிம்பிக் வெற்றியாளர்கள் படைத்து நாட்டுக்கு பெருமை சேர்ப்பார்கள் என்று திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**<<<<<END>>>>>**